DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 33/2025
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**A1 A3 A4 எதிரிகள் ஆஜர் A2 எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | மோகன் |
| Father / Husband Name | பலராமன் |
| Village | கிளியாநகர் |
| Taluk | மதுராந்தகம் |
| Age | 46 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **27.10.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிளியாநகரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் என் தம்பி பாஸ்கர் என்பவருக்கும் ஆஜர் எதிரிகள் திருவேங்கடம் மற்றும் பாலசுந்தரம் ஆகியோருக்கும் இடையே சண்டை நடந்ததாக சொன்னார்கள். நான் எனது தம்பியை உத்திரமேரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் யார் யாரை அடித்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். போலிசார் என்னை என்னை வீட்டில் வந்து விசாரித்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. உத்திரமேரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற விவரத்தை நான் போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. தம்பி கழனியில் வீடு கட்டியுள்ளார். உண்மையில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் எனது தம்பி பாஸ்கர் கொடுத்த பொய் புகாரில் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

B. Mohan

**Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.**

27/10/25

**Judicial Magistrate No.II**
**Madurantakam**